[6th March 1959

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: (a) The maximum number of seats for a panchayat under the revised scale is 15 on the basis of population. The Koilpatti panchayat had already the strength of 15 members for which it is eligible. There was therefore no need to refix the strength and to revise the ward division already in force, in the normal course.

(b) It has been brought to the notice of the Government that a resolution that the ward division might be revised before commencement of the elections was passed by the panchayat at a meeting attended by only seven members out of thirteen members then on the panchayat. The matter could not be considered as it was made after the commencement of the election proceedings.

SRI V. SUBBIAH: பஞ்சாயத்து போர்டு கூட்டத்தில், வார்டுகள் பிரித்து பஞ்சாயத்துத் தேர்தலை நடத்த வேண்டும் என்று ஏகமனதாகத் தீர்மானம் போடப்பட்டிருந்தாலும், அரசாங்கம் அத் தீர்மானத்திற்கு மதிப்புக்கொடுக்காமல், வார்டுகளைப் பிரிக்காமல், தேர்தலை நடத்தியதற்குக் காரணம் என்ன ? ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு மதிப்புக் கொடுக்க வேண்டியது ஜனநாயகத்தில் மிகவும் அவசியமல்லவா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: இந்தப் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில், ஏதாவது விஷயங்களைத் தெரிவிக்க வேண்டுமென்றால் அவைகளைத் தெரிவிப்பதற்கு மார்ச் 25-ம் தேதி நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அந்த நோட்டீஸ் பஞ்சாயத்துப் ப்ரெசிடெண்டுக்குக் கிடைத்திருந்தபோதிலும், அதன் பிறகு பத்து நாட்களுக்கு அவரிடமிருந்து ஒரு பதிலும் வராததால் அங்கே அவ்வாறு தேர்தல் நடத்த வேண்டியிருந்தது. அங்கே தேர்தல் நடந்தாயிற்று, இப்போது அது சம்பந்தமாக ஒன்றும் செய்வதற்கில்லை.

SRI V. K. KOTHANDARAMAN: வார்டுகள் பிரித்து தேர்தல் நடத்தவேண்டும் என்று ஜில்லா பஞ்சாயத்து அதிகாரி சொல்லியிருந்தும் கூட பழைய முறையிலேயே தேர்தல் நடத்தவேண்டும் என்று அரசாங்கம் தலையிட்டது உண்மையா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: அது உண்மை அல்ல.

*Community Development Scheme in Gudiyatham taluk*

* 621 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலூகாவில் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பித்தது முதல் இது வரையில் எவ்வளவு பணம் எதெதற்கு செலவழிக்கப்பட்டது ?

(ஆ) அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) & (ஆ) A statement [a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN: அந்த வட்டாரத்தில் சுகாதார வசதியோ அல்லது குடிதண்ணீர் வசதியோ இல்லாத காரணத்தினால் 25 பர்சன்ட்க்கு மேலாக யானைக்கால்களும், லெப்ரஸியும் இருப்பதாக இரண்டு வருடங்களாக எழுதப்பட்டும் அங்கு சுகாதார வசதியோ அல்லது குடிதண்ணீர் வசதியோ செய்யப்படாமல் இருக்கிறது. ஆகவே அவைகளை துரிதமாக செய்ய அரசாங்கம் உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஒரு பகுதிக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்ற கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதிலிருந்து இக் கேள்வி எழவில்லை.

---

a Printed as Appendix III on page 516 infra.